ஶ்ரீ :
ஶ்ரீமதே ராமானுஜாய நம :

# நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:)

(மலர்: 401) Sep (1) / 2023



நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

'ஶ்ரீ அஹோபில தாஸன்' க.ஶ்ரீதரன்

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஶ்ரீரங்கநாதோ ஜயது ஶ்ரீரங்கஶ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:

## உட்பொதிவு


1. லக்ஷ்மீ தந்த்ரம் ....................................................................3

2. ஸங்கல்ப ஸூர்யோதயம் ....................................................................4

3. அர்த்த பஞ்சகம்....................................................................5

4. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)....................................................................9

5. ஸ்தோத்ர ரத்னம் (பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானம்)..........................14

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபாஞ்சராத்ர ஆகம நூலான

# லக்ஷ்மீ தந்த்ரம்

(பகுதி – 221)

79. ஸர்வேஷாம் ப்ரணவ: பூர்வம் ஆயுதாநாமதோ ச்ருணு
அநலம் ஜந்மஹந்தாரம் ப்ரதாநம் அநலோர்ஜகௌ
80-1. ஸர்கேண பிண்டயேத் ஸம்ஜ்ஞாநம் நம: குலிசமந்த்ராட்

**பொருள் –** அக்னியைக் குறிக்கும் "ர", பிறவிகளைப் போக்குதலைக் குறிக்கும் "ஜ", ப்ரதாநத்தைக் குறிக்கும் "ம", அநலத்தைக் குறிக்கும் "ர" என்பது மேலே எழும்புதலைக் குறிக்கும் "ஊ" என்பதுடன் சேர்ந்து நிற்கிறது. முதலில் ப்ரணவம் உள்ளது. அதன் பின்னர் "குலிசாய நம" என்பது உள்ளது. இப்படியாக குலிச மந்த்ரராஜ மந்த்ரம் அமைந்துள்ளது ("ஓம் ஜ்ரூம் குலிசாய நம:").

80-2. ஊர்ஜம் விஹாய தத் ஸ்தாநே மாயயா பரிபூஷிதம்
81-1. ததேவ பிண்டம் ஸம்ஜ்ஞா ச நம: சக்திமநுஸ்த்வயம்

**பொருள் –** மேலே கூறப்பட்ட மந்த்ரத்தின் தொடக்கத்தில் உள்ள "ஊ" என்ற இடத்தில், எனது மாயையைக் குறிக்கும் "ஈ" அமைகிறது. அதன் பின்னர் வருகின்ற "நம:" என்பதுடன் இணைந்து எனது சக்தி மந்த்ரம் உள்ளது ("ஓம் ஜ்ரீம் சக்தயே நம:").

ஸ்ரீரங்கநாச்சியார் திருவடிகளே சரணம்
ஸ்ரீகமலவல்லி நாச்சியார் திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீவேதாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த

# ஸங்கல்ப ஸூர்யோதயம்

(பகுதி – 87)

[சிஷ்யன்] பகவானே! தங்கள் கட்டளைப்படியே நடப்பேன். ஏதேனும் ஒரு ஸித்தாந்தத்தை உண்மை என்று ஏற்பதால் மட்டுமே எந்த ஒரு விவாதமும் நடக்கிறது. ஆகவே பகவானே! எந்த ஸித்தாந்தத்தை நிலை நாட்டவேண்டும் என தாங்கள் கூறுவீர்களாக.

[குரு] நம்முடைய வேதாந்தக் கருத்துக்களை ஏற்பவர்களுடன் வாதம் செய்யும்போது, இரண்டு பிரிவினர்களும் ஏற்றுக்கொண்ட சாஸ்த்ரங்களின் அடிப்படையில் மட்டுமே விவாதம் செய்யவேண்டும். வேறு கருத்துக்களைக் கொண்டவர்களுடன் வாதம் செய்யும்போது, வேதாந்த ஸித்தாந்தத்தில் நின்று விவாதம் செய்யவேண்டும். அவ்விதம் செய்யும்போது பராசரர், பராசார்யர், சுகர், சௌநகர், போதாயநர் போன்ற சான்றோர்கள் பின்பற்றிய வழியைப் பின்பற்றவேண்டும். இவர்கள் நமக்கு அளித்த உபதேசங்களைக் கொண்டு நாம் சிறிதாகவும், எளிமையாகவும், விரிவாகவும் உள்ள ஐந்தாறு நூல்களை இயற்றியுள்ளோம். அவற்றில் ஆழ்ந்த மனத்துடன், நீ உண்மையை உணர்ந்தவனாக, சபையில் உள்ளவர்களுடைய மனதிற்கு இனிமையாக இருக்கும் ப்ரமாண தர்க்கங்களைச் செய்வாயாக.

தூப்புல்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீரங்கநாச்சியார் ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் அருளிச் செய்த

# அர்த்த பஞ்சகம்

(பகுதி – 5)

**வ்யாக்யானம்** – இதுதான் ஆர்த்தரூப ப்ரபத்தியென்றும், த்ருப்தரூப ப்ரபத்தியென்றும் இரண்டுபடிப்பட்டிருக்கும். ஆர்த்தரூப ப்ரபத்தியாவது நிர்ஹேதுக பகவத் கடாக்ஷமடியாக சாஸ்த்ராப்யாஸத்தாலும், ஸதாசார்யோபதேசத்தாலும் யதா ஜ்ஞாநம் பிறந்தவாறே, பகவதநுபவத்துக்கு விபரீதமான தேஹ ஸம்பந்தமும், தேசஸம்பந்தமும், தேசிகருடைய ஸஹவாஸமும் துஸ்ஸஹமாய், பகவதநுபவத்துக்கு ஏகாந்தமாம்படி விலக்ஷணமான தேஹத்தையும், தேசத்தையும், தேசிகரையும் ப்ராபிக்கையில் த்வரை விஞ்சி, “ஒயுமூப்புப் பிறப்பிறப்புப்பிணி வீயுமாறு செய்வான் திருவேங்கடத்தாயனா” கையாலே, “திருவேங்கடத்தானே! புகலொன்றில்லா அடியேன்”, “வேங்கடத் துறைவார்க்கு நம:" என்று பூர்ண ப்ரபத்தி பண்ணி, “பல நீ காட்டிப் படுப்பாயோ”, “இன்னங் கெடுப்பாயோ”, “இக்கரையேறியிளைத்திருந்தேன்”, “அடையவருளாய்”, “திருவாணை நின்னாணை கண்டாய்”, “இனி நான் போக லொட்டேன்” என்று தடுத்தும், வளைத்தும் பெறுகை.

**விளக்கம்** – ப்ரபத்தி உபாயம் என்பது ஆர்த்த ரூப ப்ரபத்தி மற்றும் த்ருப்த ரூப ப்ரபத்தி என்று இருவகைப்படும். ஆர்த்தரூப ப்ரபத்தி என்பது என்ன? எந்தவிதமான காரணமும் இன்றிப் பெருகும் பகவத் கடாக்ஷத்தின் விளைவாக உண்டாகின்ற சாஸ்த்ர அப்யாஸம் மற்றும் ஆசார்ய உபதேசம் ஆகியவற்றால் ஆத்மாவைக் குறித்து ஞானம் ஏற்படுகிறது. இதன் விளைவாக, பகவத் அனுபவம் உண்டாவதற்குத் தடையான சரீர ஸம்பந்தம், இருப்பிட ஸம்பந்தம், அனைத்தும் அறிந்த சான்றோர்களுடைய ஸம்பந்தம் போன்ற பலவும் தாங்க இயலாதபடி; பகவத் அனுபவம் கிட்டுவதற்கு ஒரே வழியாக உள்ள வேறுபட்ட சரீரம், திவ்யதேசம், சான்றோர்கள் போன்றவற்றை அடைவதில் உள்ள வேகம் அதிகரித்து; திருவாய்மொழி (3-3-9) – ஒயுமூப்புப் பிறப்பிறப்புப்பிணி வீயுமாறு

செய்வான் திருவேங்கடத்தாயன் – என்பதற்கு ஏற்ப திருவேங்கடத்தில் பிறப்பு முதலானவற்றை அறுப்பவன் திருவேங்கத்தில் உள்ள மாயன் என்பதால், திருவாய்மொழி (6-10-10) - திருவேங்கடத்தானே! புகலொன்றில்லா அடியேன் – என்றும், திருவாய்மொழி (3-3-6) - வேங்கடத்துறைவார்க்கு நம: – என்று பூர்ணமான ப்ரபத்தியைச் செய்து; திருவாய்மொழி (6-9-9) - பல நீ காட்டிப் படுப்பாயோ” – என்றும், திருவாய்மொழி (6-9-8) - இன்னங் கெடுப்பாயோ – என்றும், பெரியாழ்வார் திருமொழி (5-3-7) – இக்கரையேறி இளைத்திருந்தேன் – என்றும், பெரியதிருமொழி (11-8-6) – அடைய அருளாய் – என்றும், திருவாய்மொழி (10-10-2) - திருவாணை நின்னாணை கண்டாய் – என்றும், திருவாய்மொழி (10-10-1) - இனி நான் போக லொட்டேன் – என்றும் கூறுவதற்கு ஏற்ப தடுத்தும் வளைத்தும் அவனை அடைதல் ஆகும்.

**வ்யாக்யானம்** – த்ருப்த ரூப ப்ரபத்தியாவது சரீராந்தர ப்ராப்தியிலும் ஸ்வர்க்க நரகாநுபவங்களிலும் விரக்தியும் பீதியும் பிறந்து; அதினுடைய நிவ்ருத்திக்கும், பகவத் ப்ராப்திக்கும் உறுப்பாக ஸதாசார்யோபதேச க்ரமத்தாலே உபாய ஸ்வீகாரம் பண்ணி; விபரீத ப்ரவ்ருத்தி நிவ்ருத்தராய், வேத விஹிதமான வர்ணாச்ரமாநுஷ்டாநமும், பகவத் பாகவத கைங்கர்யமும், மாநஸ வாசிக காயிகங்களாலே யதாபலம் அநுஷ்டித்து; ஈச்வரன் சேஷியாய், நியந்தாவாய், ஸ்வாமியாய், சரீரியாய், வ்யாபகனாய், தாரகனாய், ரக்ஷகனாய், போக்தாவாய், ஸர்வஜ்ஞனாய், ஸர்வசக்தியாய், ஸர்வ ஸம்பூர்ணனாய், அவாப்த ஸமஸ்தகாமனாய் இருக்கிற ஆகாரத்தையும்; தான் அவனுக்கு சேஷமாய், நியாம்யமாய், ஸ்வம்மாய், சரீரமாய், வ்யாப்யமாய், தார்யமாய், ரக்ஷ்யமாய், போக்யமாய், அஜ்ஞனாய், அசக்தனாய், அபூர்ணனாய், ஸாபேக்ஷனாய் இருக்கிற ஆகாரத்தையும், அநுஸந்தித்துக்கொண்டு; “களைவாய் துன்பங் களையாதொழிவாய் களைகண் மற்றிலேன்” என்று உபாயத்தில் ஸர்வபரங்களையும் அவன் பக்கலிலே பொகட்டு, நிர்பரனாயிருக்கை.

**விளக்கம்** - த்ருப்தரூப ப்ரபத்தி என்பது என்ன? சரீரம் எடுத்தும் பிறந்த வாழ்க்கையிலும், ஸ்வர்கம் மற்றும் நரகம் போன்று அனுபவங்களிலும் முறையே விரக்தி மற்றும் அச்சம் ஏற்பட்டு; அதனுடைய விலகுதலுக்கும், பகவானை அடைவதற்கும் அடிப்படையாக உள்ளதான ஆசார்ய உபதேசம் என்ற முறைப்படி உபாயத்தைக் கைக்கொண்டு; தவறான செயல்களில் ஈடுபடுவதைத்

தவிர்த்தவராக, வேதங்களால் விதிக்கப்பட்ட வர்ணாச்ரம கர்மங்களை இயற்றியவராக, பகவத் பாகவத கைங்கர்யம் செய்தபடி, மனம் வாக்கு மற்றும் சரீரம் ஆகியவற்றைத் தங்களுடைய சக்திக்கு ஏற்றபடி இயற்றி; ஈச்வரன் எஜமானனாகவும், நியமிப்பவனாகவும், ஸ்வாமியாகவும், நம்மைத் தனது சரீரமாகக் கொண்டவனாகவும், எங்கும் பரவி நிற்பவனாகவும், அனைத்திற்கும் ஆதாரமாக உள்ளவனாகவும், அனைத்தையும் காப்பவனாகவும், அனைத்தையும் அனுபவித்தபடி இருப்பவனாகவும், அனைத்து அறிந்தவனாகவும், அனைத்து சக்திகளையும் கொண்டவனாகவும், அனைத்துவிதங்களிலும் பரிபூர்ணமாகவும், அனைத்து விருப்பங்களையும் நிறைவேறப் பெற்றவனாகவும் உள்ள தன்மையை அறிந்து; நாம் அவனுக்குத் தொண்டனாகவும், அவனால் நியமிக்கப்படுபவனாகவும், அவனுடைய சொத்தாக உள்ளவனாகவும், அவனுக்குச் சரீரமாக உள்ளவனாகவும், அவனால் வ்யாபிக்கப்பட்டுள்ளவனாகவும், அவனால் தாங்கப்படுபவனாகவும், அவனால் காக்கப்படுபவனாகவும், அவனுக்கு இனிமையாக உள்ளவனாகவும், ஏதும் அறியாதவனாகவும், எந்த சக்தியும் அற்றவனாகவும், எதிலும் பூர்ணத்தன்மை இல்லாதவனாகவும், அனைத்து விருப்பங்களையும் கொண்டிருப்பவனாகவும் உள்ள தன்மையை எண்ணியபடி இருந்து; திருவாய்மொழி (5-8-8) – களைவாய் துன்பங் களையாதொழிவாய் களைகண் மற்றிலேன் - என்று உபாயத்தில் அனைத்து பாரங்களையும் அவனிடம் ஒப்படைத்து, பாரம் அற்றவனாக இருத்தல் ஆகும்.

**வ்யாக்யானம் -** ஆசார்யாபிமாநமாவது இவை ஒன்றுக்கும் சக்தனன்றிக்கேயிருப்பானொருவனைக் குறித்து, இவனுடைய இழவையும், இவனைப் பெற்றால் ஈச்வரனுக்குண்டான ப்ரீதியையும் அநுஸந்தித்து; ஸ்தநந்தய ப்ரஜைக்கு வ்யாதியுண்டானால் அது தன் குறையாக நினைத்து ஔஷத ஸேவை பண்ணும் மாதாவைப்போலே இவனுக்காகத் தான் உபாயாநுஷ்டாநம் பண்ணி ரக்ஷிக்கவல்ல பரமதயாளுவான மஹாபாகவதன் அபிமாநத்திலே ஒதுங்கி, “வல்ல பரிசு வருவிப்பரேல் அது காண்டும்” என்று சொல்லுகிறபடியே ஸகல ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளையும் அவனிட்ட வழக்காக்குகை. எம்பெருமான் தனித்து நித்ய ஸித்தப் ப்ராப்யனாகா நிற்கச் செய்தே ஸகல தேவதாந்தர்யாமியாய்க் கொண்டு ப்ராப்யனாகிறாப் போலே, இவ்வாசார்யாபிமாநமும் தனியே உபாயமாகா நிற்கச் செய்தேயும், எல்லா உபாயங்களுக்கும் ஸஹகாரியுமாய் ஸ்வதந்த்ரமுமாய் இருக்கும்.

**விளக்கம்** - ஆசாரிய அபிமானம் என்பது என்ன? மேலே கூறப்பட்ட எந்த ஒன்றையும் கைக்கொள்ள சக்தி அற்ற ஒருவனைக் குறித்து, அந்த ஒருவன் தனது வாழ்வில் இழந்து கொண்டுள்ள விஷயத்தைக் குறித்து, இப்படிப்பட்ட ஒருவனை ஈச்வரன் பெற்றால் ஈச்வரனுக்கு ஏற்படக்கூடிய மகிழ்வை எண்ணியும்; தான் பெற்ற குழந்தைக்கு நோய் உண்டானால் அந்த நோயானது தனது குறை என்று எண்ணி மருத்துவ உதவிகள் செய்யும் தாய் போன்று அந்த ஒருவனுக்காகத் தான் உபாயத்தில் ஈடுபட்டும் காப்பாற்றக்கூடிய மிகவும் கருணை பொருந்திய மஹாபாகவதனை அண்டி நிற்பது ஆகும். மேலும், நாச்சியார் திருமொழி (10-10) - வல்ல பரிசு வருவிப்பரேல் அது காண்டும் - என்பதற்கு ஏற்ப அனைத்து செயல்பாடுகள் மற்றும் செயலைப் புரியாமல் விலக்குதல் ஆகியவற்றை அவனே செய்வதாகக் கொள்ளுதல். ஸர்வேச்வரன் தனியாக நின்று அனைவராலும் அடையலாம்படி உள்ளபோதிலும், அனைத்து தேவதைகளுடைய அந்தர்யாமியாக நின்று அடையலாம்படி உள்ளது போன்று, ஆசார்ய அபிமானம் என்பது தனியான உபாயமாக உள்ளபோதிலும், அனைத்து உபாயங்களுக்கும் துனை நிற்பதாகவும் சுதந்திரமாகவும் உள்ளதாகும்.

ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

# திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த
முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 366)

5-4-6 பின் நின்ற காதல்நோய் நெஞ்சம் பெரிதடுமால்
முன் நின்று இரா ஊழி கண் புதையடிமூற்றால்
மன்னின்ற சக்கரத்து எம்மாயவனும் வாரானால்
இந்நின்ற நீள் ஆவி காப்பார் ஆர் இவ்விடத்தே

**பொருள்** - விடாமல் பின் தொடர்ந்து வருகின்ற காதல் என்ற நோயானது, தனக்குப் பிறப்பிடமாக உள்ள எனது நெஞ்சத்தை மிகவும் துன்புறுத்தியபடி உள்ளது. எனக்கு முன்பு நிற்கின்ற இரவுப்பொழுதானது, கல்பகாலம் போன்று, கண்களின் ஒளியை மூடி மறைக்கிறது. இவ்விதம் முன்புறமும் பின்புறமும் விரோதியாகளாக உள்ள நிலையில், அடியார்களுடைய வினைகளைத் தீர்ப்பதற்கு உதவுகின்ற சக்கரத்தாழ்வானைக் கொண்டவனும், தனது வியக்கவைக்கும் லீலைகளைக் கொண்டு என்னை போன்று உள்ளவர்களுக்குத் தன்னையே ஆக்கியவனும் ஆகிய க்ருஷ்ணன் வரவில்லை. எப்போதும் துக்கத்தின் அனுபவத்தையே அடைந்தபடி நின்றாலும் கூட, அதற்கும் இளைக்காதபடி உள்ள எனது இந்த ஆத்மாவை, இந்த நிலையிலிருந்து காப்பாற்ற யார் உள்ளனர்?

**அவதாரிகை** - விரஹவ்யஸநமும் செல்லாநிற்க, ராத்ரியுமாய் ரக்ஷகனானவனும் வாராதொழிந்தால் முடியப் பெறாத ப்ராணனை ரக்ஷிப்பாரார் என்கிறாள்.

**விளக்கம்** – "விரகத்தில் ஏற்பட்ட துன்பமும் அகலாமல் உள்ளது. இரவுப்பொழுதும் நீடித்தபடி உள்ளது. இந்த நிலையிலும் காப்பாற்றுபவன் வரவில்லை என்றால், முடிந்து போகாமல் நிற்கும் இந்த உயிரை யார் காப்பாற்றுபவர்கள்?", என்கிறாள்.

**வ்யாக்யானம்** - (பின் நின்ற காதல் நோய்) புக்கவிடம்புக்கு வடிம்பிட்டு நலிகிற ப்ரேம வ்யாதியானது. இடைந்தொதுங்குகைக்கு ஒரு நிழலில்லாதபடியிருக்கை. (நெஞ்சம் பெரிதடுமால்) நெஞ்சை மிகவும் நோவுபடுத்தாநின்றது. நெருப்பானது சுருணையை வேவப் பண்ணி, பின்னையிறே புறம்பே போய்ச் சுடுவது; அப்படியே, தான் கிடக்குமத்தை மிகவும் நலியாநின்றதாயிற்று. (முன்னின்று இத்யாதி) ப்ரேம வ்யாதியும் ராத்ரியாகிற கல்பமும் தன்னிலே ஸங்கேதித்து வந்தாப்போலே இராநின்றது. "நான் பின்னிட்டு வருகிறேன், நீ முன்னே தப்பாமே சூழ்ந்துகொள்" என்று வருவாரைப்போலே வந்தது. எதிரிகள் எளியரானால் அவர் கையில் வில்லைப் பறிப்பது, க்ஷேபிப்பதாய்க் கொண்டு பரிபவிப்பாரைப் போலே, இத்தலையில் எளிமை கண்டு ராத்ரியாகிறவூழி, முன்னே நின்று கண்ணை மறையாநின்றது. உட்கண்ணைக் காதல் மறையாநின்றது, கட்கண்ணை ராத்ரி மறைத்தது.

**விளக்கம்** - (பின் நின்ற காதல் நோய்) - தான் குடி கொண்ட சரீரத்தில், அடி மேல் அடி வைத்து, நலிந்தபடி உள்ளதான காதல் என்ற வ்யாதியானது. இதிலிருந்து விலகி ஒதுங்குவதற்கு ஒரு நிழல் இல்லாதபடியான நிலை. (பெரிதடுமால்) - எனது நெஞ்சத்தை மிகவும் நோகும்படிச்செய்கிறது. ஆனால் நோயானது முதலில் சரீரத்தை வருத்தி, அதன் பின்னர் அல்லவோ நெஞ்சத்தை வருத்தும் என்ற ஐயத்திற்கு விடை அளிக்கிறார். நெருப்பானது சுருணையை முதலில் எரித்து, அதன் பின்னர் அல்லவோ வெப்பத்தின் மூலம் வெளியில் சூடுகிறது? அது போன்றே காதல் நோயானது, தான் உள்ள இடமான நெஞ்சத்தை மிகவும் துன்புறுத்தியபடி உள்ளது. (முன் நின்ற இத்யாதி) – காதல் என்ற நோயானது, இரவு என்பதான கல்பகாலமும் தன்னுடன் இணைந்து வருவது போன்று வந்தது. அதாவது காதலானது கல்பத்திடம், "நான் பின்னே வருகிறேன். நீ முன்பாகச் சென்று, அவள் தப்பாதபடி சூழ்ந்து கொள்வாயாக" என்று உரைத்தது போன்று உள்ளது. எதிரிகள் எளியவர்களாக இருந்தல், அவர்கள் கைகலில் உள்ள வில்லைப் பறித்தல் மற்றும் பரிகாசம் செய்தல் என்பது போன்ற செயல்களைச் செய்வர்; இதனைப் போன்று இவள் தலைவனைப் பிரிந்த எளிமையில் உள்ளதால், இரவுப்பொழுது என்னும் ஊழிக் காலமானது இவள் முன்பாக நின்று, இவளுடைய கண்களை மறைத்தது. ஞானம் என்ற கண்ணைக் காதல் மறைத்தது, புறக்கண்களை இரவு மறைத்தது.

**வ்யாக்யானம்** - (கண் புதைய மூடிற்றால்) க்ராஹகமுமாய் ப்ரகாசகமுமாயிருக்கிற சக்ஷுரிந்த்ரியத்தை, க்ராஹ்யமான இருள் வந்து மூடாநின்றது. அன்றிக்கே, இருளோடொத்த நிறத்தையுடையவன் வந்து முன்னே நின்றாலும் காணவொண்ணாதபடி, இராவாகிறவூழி கண்ணை மறையாநின்றதென்னவுமாம். (மன்னின்ற இத்யாதி) "எப்போதும் கைகழலா நேமியான்" என்கிறபடியே, ஆச்ரிதர்க்கு விரோதிகளுண்டான போதாக ஆயுதமெடுக்கப் பார்த்திராதே, எப்போதுமொக்கக் கையிலே விடாதே கொண்டிருக்குமாயிற்று. (எம்மாயவனும்) ப்ரகாச த்ரவ்யத்தையிட்டுத் தமஸ்ஸை அழைக்கவல்ல ஆச்சர்யபூதன். நிவர்த்தகத்தையிட்டு நிவர்த்யத்தை அழைக்குமவனுக்கு, நிவர்த்தகத்தையிட்டு நிவர்த்யத்தை நிவர்த்திப்பிக்கத் தட்டுண்டோ?

**விளக்கம்** - (கண் புதைய மூடிற்றால்) - அனைத்தையும் அறிவதாகவும், ப்ரகாசமாகவும் உள்ள கண் என்ற இந்திரியத்தை, அந்தக் கண்களால் அறியப்பட்டக்கூடிய இருளே வந்து மறைத்தது. அல்லது வேறுவிதமாகவும் பொருள் கூறலாம்; இருள் போன்ற நிறம் கொண்ட க்ருஷ்ணன் தன் முன்பாக வந்து நின்றாலும் அறிய இயலாதபடி, இரவு என்னும் ஊழி, கண்ணை மறைத்தது என்றும் கூறலாம். (மன்னின்ற இத்யாதி) - பெரிய திருவந்தாதி (87) – எப்போதும் கைகழலா நேமியான் – என்பதற்கு ஏற்ப, அடியார்களுக்கு ஆபத்து ஏற்படுகின்ற அந்த ஒரு காலத்தில் ஆயுதத்தை எடுக்க முயலாமல், எப்போது ஒரே போன்று திருக்கரத்தில் ஆயுதத்தை விடமால் கொண்டிருத்தல். (எம்மாயவனும்) - சூரியன் என்ற ஒளி வீசும் பொருளை மறைத்து, அந்த இருளுக்கு நிகராக உள்ள ஜயத்ரதனை அழைத்தான். இப்படிப்பட வியக்கவைக்கும் செயல்களைச் செய்பவன். விலக்குகின்ற பொருளைக் கொண்டு, விலக்கப்படும் பொருளை அழைக்கும் அவனுக்கு, விலக்குகின்ற பொருளைக் கொண்டு, விலக்கப்படும் பொருளை போகும்படி செய்தல் அரிதான செயலாகுமோ? அதனைச் செய்வதில் என்ன தடை உள்ளது? [குறிப்பு: விலக்குகின்ற பொருளைக் கொண்டு, விலக்கப்படும் பொருளை அழைக்கும் அவனுக்கு – இருளை விலக்கும் சூரியன் மூலமே, இருளான ஜயத்ரதனை அழைத்தான்].

**வ்யாக்யானம் -** (வாரானால்) இங்கு ஸங்கல்பம் அழியவேண்டா, வருவதாக நினைக்க அமையும். "ஸம்பவாம்யாத்ம மாயயா" வருவதாக இச்சிக்க அமையும். "ஆயுதமெடேன்" என்று ஆயுதமெடுக்கையும், ப்ரகாச த்ரவ்யத்தையிட்டுத் தமஸ்ஸைப் போக்கக் கடவதென்கிற மர்யாதையைக் குலைக்கையுமாகிற இவை வேண்டா; தான் வர அமையும்; நிவர்த்தக ஸ்வபாவத்தாலே நிவர்த்யம் தன்னடையேபோம்.

**விளக்கம் -** (வாரானால்) – "ஆயுதம் எடுக்கமாட்டேன்" என்று கூறி, பீஷ்மரை அழிப்பதற்காக ஆயுதம் எடுத்த ஆச்சர்யமானவன். இங்கு வருவதற்கு இது போறு ஸங்கல்பத்தை அழித்துக் கொள்ளவேண்டாம்; அதாவது தான் ஆயுதம் எடுப்பதில்லை என்று செய்த ஸங்கல்பம் மாறவேண்டும் என்ற அவசியம் இல்லை; அது போன்ற கடினமான செயல்கள் ஏதும் இப்போது செய்யவேண்டாம்; இங்கு வருவதாக எண்ணினால் மட்டுமே போதுமானது. கீதை (4-6) – ஸம்பவாமி ஆத்ம மாயயா – எனது மாயையால் நான் அவதரிக்கிறேன் – என்றான்; வருவதாக ஆசை கொண்டால் மட்டுமே போதுமானது. "ஆயுதம் எடுக்கமாட்டேன்" என்று சபதம் செய்துவிட்டு, ஆயுதம் எடுத்தல்; ப்ரகாசமான சூரியனைக் கொண்டு இருளான ஜயத்ரதனை வரவழைத்தல் என்னும் தகாத செயலைச் செய்தல்; இது போன்ற எதனையும் இவன் இப்போது செய்யவேண்டாம்; தான் இங்கு வந்தால் மட்டுமே போதுமானதாகும். விலக்கவல்ல பொருள்களுடைய தன்மையால், விலக்கப்பட வேண்டிய பொருள்கள் தானாகவே அகலும்.

**வ்யாக்யானம் -** (இந்நின்ற நீளாவி காப்பாரார்) முடிய வேண்டுமளவிலே நூறே பிராயமாயிருக்கிற இவ்வாத்ம வஸ்துவை முடித்து நோக்குவாரார். "அச்சேத்யோய மதாஹ்யோயம்" என்கிற வசநத்தைக் கொண்டு நின்று வழக்குப் பேசா நின்றதாயிற்று ஆத்மவஸ்து. இத்தை முடித்து நம்மை நோக்குவார் ஆர்? என்கிறதென்று முறுகச் சொன்னது தன்னை, ஒரு தமிழன் இச்சபத்தத்துக்குத் தாத்பர்யமாக இட்டு வைக்கிறான் "பிரிவிலும் முடியாத என்னுயிர்ப் பகையை நீக்கி, என்னை நோக்குவாரார்" என்று. (இவ்விடத்தே) ஸர்வரக்ஷகனானவனும் உதவாத இவ்வவஸ்தையில், இனி முடிந்து பிழைக்கையிறே ஸுகம்.

**விளக்கம்** - (இந்நின்ற நீளாவி காப்பாரார்) - முடியவேண்டும் என்னும்போது நூறு வயதாக உள்ளபோதிலும் இந்த ஆத்மாவை முடித்துப் பார்ப்பவர்கள் யார் உள்ளனர்? கீதை (2-24) – அச்சேத்யோய மதாஹ்யோயம் - ஆத்மா வெட்டுப்பட இயலாதவன் - என்பதைக் கொண்டு நிற்கும் ஆத்மா. இதனை முடிக்கும் திறன் கொண்டவர்கள் யார்? இவ்விதம் உறுதியாகச் சொல்வதை ஒரு தமிழ்ப்புலவன் "பிரிவிலும் முடியாத என்னுயிர்ப் பகையை நீக்கி, என்னை நோக்குவாரார் - நான் மறைந்தாலும் பிழைத்தபடி உள்ள எனது வாழ்க்கை என்னும் பகையை யாரால் முடிக்க இயலும்" என்றான். (இவ்விடத்தே) - அனைத்தையும் காப்பாற்றும் ஸர்வேச்வரனும் உதவாத இந்த இந்நிலையில், இனி முடிந்து, அதன் விளைவாக இந்த வேதனைகளிலிருந்து பிழைத்தலே சுகம் ஆகும்.

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்வாமி ஆளவந்தார் அருளிச் செய்த

# ஸ்தோத்ர ரத்னம்

இதற்கு ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை

அருளிச் செய்த வ்யாக்யானம்

(பகுதி – 80)

**வ்யாக்யானம் -** (நமஸ்யதார்த்தி க்ஷபணே க்ருத க்ஷணம் ) ப்ராஸங்கிகமாகப் பிறந்த அபதாநம் கிடக்க கிடீர்! திருவடிகளிலே தலை சாய்த்தாருடைய ஆர்த்திகளைப் போக்குகையிலே க்ருதாவஸரமாயுள்ளத்தை. ஆச்ரித ரக்ஷணத்திலே அவஸர ப்ரதீக்ஷமான திருவடிகளைக் காண்கைக்கு "கதா நு ஸாக்ஷாத்கரவாணி சக்ஷுஷா" என்று கூப்பிடவேண்டுவதே! (தநம் மதியம்) "வைத்தமாநிதி" என்கிறபடியே எனக்கு ப்ராப்யமுமாய், ப்ராபகமுமாய் உள்ளத்தை. (தவ பாத பங்கஜம்) ஸர்வஸுலபமுமாய், ஆச்ரித வத்ஸலமுமாய், நிரதிசய போக்யமுமான திருவடிகளை. (கதா நு ஸாக்ஷாத்கரவாணி) த்ரைவிக்ரமாபதாந தூளி தானத்திலும் காணப் பெறாத நான் என்று காணவிருக்கிறேன்? "விஷயங்களிலே மண்டிக் கிடக்கிற ஸம்ஸாரிகள் நடுவே இருக்கிற உமக்கு நம்மையொழியச் செல்லாதபடி புகுர நிறுத்தினோமாகில், ஒன்றும் செய்யாதாரைப்போலே கூப்பிடுகிறதென்?" என்ன; கண்ணாலே கண்டு விடாய் தீர இருக்கிற எனக்கு, ஸம்ஸாரிகளிற்காட்டில் ஒரு வ்யாவ்ருத்தி பண்ணித்தர அமையுமோ? (சக்ஷுஷா) ஒரு தேச விசேஷத்திலே ஸதா தர்சநம் பண்ணப்பெறாதே காண விடாய்த்த எனக்கு, கண்ணாலே காணவேணும்.

**விளக்கம் -** (நமஸ்யதார்த்தி க்ஷபணே க்ருத க்ஷணம்) - இந்த நிலைக்கு ஏற்றபடியாகப் பிறந்ததான முன்னர் நடந்த நிகழ்வுகள் இருக்கக்கூடும். திருவடிகளில் வந்து தலைகளைச் சாய்த்துக் கிடப்பவர்களுடைய துக்கத்தைப் போக்குவதில் செய்யவேண்டிய செயலைத் தகுந்த நேரத்தில் செய்கின்ற

நிலையை. அடியார்களைக் காப்பதில் தகுந்த காலத்தை எதிர்பார்த்து நிற்கின்ற திருவடிகளை காண்பதற்கு “கதா நு ஸாக்ஷாத்கரவாணி சக்ஷுஷா - எப்போது உனது திருவடிகளை நான் நேரடியாக காண்பதற்கு இயலும்” என்று அழைக்கும்படியாக உள்ளதே! (தநம் மதீயம்) – திருவாய்மொழி (6-7-11) – வைத்த மாநிதி - என்பதற்கு ஏற்ப என்னால் அடையப்படவேண்டிய இலக்காகவும், அந்த இலக்கை அடையும்படிச் செய்வதாக உள்ளதாகவும் இருக்கின்ற திருவடிகளை. (தவ பாத பங்கஜம்) – அடைவதற்கு மிகவும் எளிதாக, அடியார்களிடம் மிகவும் அன்பு கொண்டதாக, எப்போதும் எல்லையற்ற இனிமை கொண்டதாக உள்ள திருவடிகளை. (கதா நு ஸாக்ஷாத்கரவாணி) - த்ரிவிக்ரம அவதாரம் எடுத்தபோது செய்யப்பட்ட பெருஞ்செயலைக் காண இயலாத நான் எப்போது காண்பேன்? இதனைக் கேட்ட ஸர்வேச்வரன், “உலக விஷயங்களில் எப்போதும் ஈடுபட்டபடி உள்ள ஸம்ஸாரிகளின் நடுவில் இருக்கும் உமக்கு, நம்மை அல்லாது வேறு எதிலாவது உம்முடைய சிந்தனை செல்லும்படி நான் செய்தோமோ? இல்லை; பின்பு, எந்த உதவியும் செய்யாதவர்களை அழைப்பது போன்று நம்மை ஏன் நீவிர் அழைக்கிறீர்?”, என்றான். இதற்கு விடை அளிக்கிறார். கண்களால் கண்டால் மட்டுமே எனது ஏக்கம் தீரும். இப்படிப்பட்ட உள்ளபோது ஸம்ஸாரிகளைக் காட்டிலும் ஒரு வேறுபாடு ஏற்படுத்திக் கொடுத்தால் மட்டுமே போதுமானதாக அமையுமோ? (சக்ஷுஷா) - பரமபதத்தில் உள்ள இருப்பை எப்போதும் பார்த்தபடி இருக்க இயலாத நிலையால் தவித்தபடி உள்ள எனக்கு, உனது திருவடிகளை எனது கண்களால் காணுபடிச் செய்யவேண்டும்.

ஸ்வாமி ஆளவந்தார் திருவடிகளே சரணம்

ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்